**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 199/2013**

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | லோகநாதன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | துரைசாமி | RELIGION | இந்து |
| AGE | 65 | OCCUPATION | |
| VILLAGE | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 24.10.2025.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் பியூசி படித்துள்ளேன். நான் பெரிய அளவில் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். நான் தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். 10 வருடங்களாக தொழில் செய்கிறேன். நான் 30, 40 வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றாலும் வழக்கிற்காக 10 வருடங்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு போடுவதற்கு முன்பிருந்து தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்து மரங்களை இறக்குமதி செய்து மரப்பலகைகளாக மாற்றும் மர டிப்போ வைத்து நடத்துகிறேன் என்றால் சரிதான். குடியாத்தத்தில் எனக்கு லாட்ஜ் மற்றும் ஸ்வீட் கடை உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தான் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி எனது தம்பியா என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி பாஸ்கர் எனது குடும்ப நண்பர் என்றால் குடும்ப நண்பர் அல்ல நண்பர்.

3. வழக்கை முதலில் சலீம் பாஷா என்பவர் எங்கள் மீது போட்டிருந்தார் என்றால் சரிதான். நான் தாவாவை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். விவரம் தெரியும். இந்த வழக்கில் பதிலை நான் தாக்கல் செய்து அதை எனது தம்பியும், பாஸ்கரும் ஏற்றுக்கொண்டார்கள் என்றால் நான் தாக்கல் செய்தேன் அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. நான் எனக்காகவும் எனது தம்பி முனிரத்தினத்திற்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்த பதிலுரையில் பாரா 12–ல் 3ஆம் பிரதிவாதி வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3ஆம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த விவரம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 3ஆம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்காதது தவறு என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. பதிலுரையில் 3ஆம் பிரதிவாதி தேவையற்ற தரப்பினர் என சொல்லிவிட்டு பிரமாண வாக்குமூலத்தில் 3ஆம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காதது தவறு என முரண்பட்டு சொல்லியுள்ளேன் என்றால் தெரியவில்லை. தாவாவில் 3 அயிட்டம் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 3 அயிட்ட சொத்துக்களில் எனக்கும், எனது மனைவிக்கும் அல்லது எனது சகோதரருக்கும், அவரது மனைவிக்கும் எதாவது உரிமை உள்ளதா என்றால் உள்ளது, சர்வே எண்.4/1–ல் சேர்த்து வழக்கு போட்டுள்ளார்.

6. தாவா முதல் அயிட்ட சொத்தான சர்வே எண்.11/2–ஐ பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. 2வது அயிட்ட சொத்தான சர்வே எண்.3/4பி மற்றும் 3வது அயிட்ட சொத்தான சர்வே எண்.4/2–ஐ பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. மேற்படி சொத்துக்கள் எருக்கம்பட்டு கிராமத்தை சார்ந்தவை என்றால் சரிதான். சர்வே எண்கள் 11/2, 3/4பி, 4/2 ஆகியவற்றை சலீம்பாஷா என்பவர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அவர் சுமார் 40 ஆண்டுகளாக அனுபவித்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு போட்டபிறகு எத்தனை ஆண்டுகளாக அனுபவிக்கிறார் என விசாரித்தேனா என்றால் இல்லை. அவர் 40 ஆண்டுகளாக அனுபவித்து வந்தார் என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது சலீம்பாஷா இறந்துவிட்டார் என்றாலும் அவரது வாரிசுகள் வாதிகள் 2 முதல் 6 வாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். வாதிகள் 2 முதல் 6 வழக்கு நிலுவையில் இருந்தபோது 04.09.2017 தேதியிட்ட கிரயப்பத்திரம்படி 7ஆம் வாதிக்கு தாவா சொத்தை விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி 7ஆம் வாதி 23.02.2024 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் படி வாதிகள் 8 மற்றும் 9–க்கு தாவா சொத்தை விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

வாதிகள் 8 மற்றும் 9 தான் தாவா சொத்தை தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வருவாய் ஆவணங்கள் முதலில் 1ஆம் வாதி பெயரில் இருந்து பிறகு 7ஆம் வாதி பெயரில் மாற்றப்பட்டு தற்போது 8 மற்றும் 9ஆம் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.3/4, 4, 11/2, 12, 13 ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 33.37 ஏக்கர் அமினா பீ என்பவர் அப்துல் ரஷீத் மற்றும் நான்கு நபர்களிடம் இருந்து 22.11.1944ஆம் தேதியிட்ட பி.சா.ஆ.1 கிரய பத்திரத்தின் படி கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. நான் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி விவரம் பற்றி பத்தி 8–ல் தெரிவித்துவிட்டு தற்போது தெரியாது என சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக பெரிய நிலபரப்பை கொண்ட ஒருவர் ஒரு சிறிய நிலத்தை விற்கும்போது அவருக்கு உரிமையுள்ள மற்ற நிலங்களின் வழியாக வழி பாத்தியத்தை ஏற்படுத்தி விற்க முடியுமா என்றால் முடியாது. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால் எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றாலும் ஆனால் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் சொத்தை விற்பவரின் தாய் பத்திரத்தில் வழி பாத்தியம் குறிப்பிட்டிருக்க அவசியமில்லை என்றால் சரியல்ல, அவசியம் உள்ளது.

10. சர்வே எண்.11, 12, 13, 3, 4 ஆகியவை தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 12, 3 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சொத்தின் சர்வே எண்.12, 13, 4. சர்வே எண்.12 தற்போது 12/1, 12/2, 12/3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.12/1, 12/2 மற்றும் 12/3–ல் ஒரு பகுதி எனக்கும் எனது மனைவி பானுமதிக்கும் சொந்தமானது என்றால் சரிதான்.

11. சர்வே எண்.13 தற்போது 13/1, 13/2, 13/3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.13/1, 13/2, 12/3–ல் ஒரு பகுதி 2ஆம் பிரதிவாதிக்கும் அவரது மனைவி ஜோதிஸ்வரிக்கும் சொந்தமானது என்றால் சரிதான். சர்வே எண்.4 தற்போது 4/1, 4/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4/1 சர்வே எண் 2ஆம் பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் சொந்தமானது என்றால் சரிதான். சர்வே எண்.3 தற்போது சர்வே எண்.3/1, 3/2எ, 3/2பி, 3/3எ, 3/3பி, 3/4எ, 3/4பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. எனது சர்வே எண்.12/1, 12/2, 12/3, 13/1 ஆகியவற்றிற்கு வடக்கில் வி.கோட்டா நோக்கி செல்லும் சாலை உள்ளதா என்றால் ரோடு உள்ளது. அந்த ரோட்டு வழியாக வி.கோட்டாவிற்கு போக முடியுமா என்றால் முடியும். சர்வே எண்.13/1–க்கு கிழக்கே சர்வே எண்.13/3 உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.13/1–க்கு கிழக்கே யார் சொத்து அமைந்துள்ளது என எனக்கு தெரியவில்லை. எனக்கு விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.4/1–க்கு செக்குபந்தி தற்போது தெரியாது ஆவணம் பார்த்தால் சொல்ல முடியும். சர்வே எண்.4/1–க்கு கிழக்கில் 3/4எ, 3/4பி, 4/2 அமைந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.3/4பி மற்றும் 4/2 வாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

13. அந்த இரண்டு சொத்துக்களும் தாவாவில் 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண்.4/1–க்கு வடக்கில் சர்வே எண்.13/2 மற்றும் சர்வே எண்.13/3 அமைந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.13/3–ஐ 7ஆம் வாதி ஷமில் அகமது என்பவர் சித்தாலே மஸிஹா காதூன் வகையறாவிடம் இருந்து 04.09.2017–ல் வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஷமில் அகமது அந்த சொத்தை வாங்கி 8 மற்றும் 9வது வாதிகளுக்கு விற்றார் என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

14. சர்வே எண்.13/3–க்கு வடக்கு பக்கம் வி.கோட்டா ரோடு வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 13/3–க்கு தெற்குபக்கம் சர்வே எண்.4/1 அமைந்துள்ளது என்றால் செக்குபந்தி பார்த்து தான் சொல்ல முடியும். சர்வே எண்.13/3–ல் இருந்து சர்வே எண்.3/4பி–க்கு சர்வே எண்.4/1–ல் வழி பாத்தியம் அமைந்துள்ளது என்றால் வழிபாத்தியம் இல்லை. வழி பாத்தியம் உள்ளது என்றாலும் வாதிகள் வேலி போட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அதுபோல் அனுபவிக்கவில்லை. அமீனா பீ விற்பனை செய்த அனைத்து கிரய பத்திரங்களிலும் சர்வே எண்.4/1–ல் வழி பாத்தியம் அமைத்து கொடுத்துள்ளார் என்றால் அதுபோல் கொடுக்கவில்லை.

15. அமீனா பீ விற்பனை செய்த கிரயப்பத்திரங்களை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்துள்ளேன். அந்த ஆவணங்களில் அமீனா பீ 1ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் வழி பாத்தியம் உள்ளது என்றால் அந்த பத்திரம் போலி பத்திரம் அதில் வழி பாத்தியம் இல்லை. போலி பத்திரம் என பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் எனது சகோதரரும் வாதிகளின்

சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளோமா என்றால் நாங்கள் செய்யவில்லை அவர்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். அதாவது சர்வே எண்.4/1–ல் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என சொல்கிறேன் என்றால் ஆமாம்.

16. சர்வே எண்.3/4பி, 4/2 மற்றும் 4/1–ல் ஆக்கிரமிப்பு செய்த பகுதி தென்னந்தோப்பாக உள்ளது என்றால் சரியல்ல காலியிடமாக உள்ளது. 4/1–ல் ஆக்கிரமிப்பு செய்யாத பகுதி மட்டும் கரம்பாக உள்ளது என்றால் சரியல்ல ஆக்கிரமிப்பு செய்த பகுதியும், ஆக்கிரமிப்பு செய்யாத பகுதியும் கரம்பாக உள்ளது. ஆக்கிரமிப்பு செய்த பகுதி தென்னந்தோப்பாக உள்ளது என்றாலும் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.3/4பி மற்றும் 4/2 ஆகியவை நான்குபுறமும் நிலங்களால் சூழப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வாங்கிய சொத்தின் தாய் பத்திரம் எங்களிடம் உள்ளது என்றால் எங்களுக்கு விற்றவரின் பத்திரம் எங்களிடம் உள்ளது. அந்த பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கிற்கு தேவைப்படாததால் தாக்கல் செய்யவில்லை.

17. நாங்கள் வாங்கிய சொத்தின் தாய் பத்திரம் குறித்து பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அமீனா பீ சர்வே எண்.3/4பி மற்றும் 4/2–ஐ விற்பனை செய்த பிறகுதான் எங்களுக்கு சொந்தமான சர்வே எண்.4/1–ஐ எங்களுக்கு விற்றவர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் 3/4பி மற்றும் 4/2–ஐ எப்போது விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது. அமீனா பீ முதலில் யாருக்கு விற்பனை செய்தார் என்ற விவரமும் வழிபாத்தியம் அமைத்து விற்பனை செய்தார் என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் ஆனால் வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

18. அமீனா பீ சர்வே எண்.4/1–ல் வழி பாத்தியம் அமைத்து விற்பனை செய்ததை அமீனா பீ–ன் வாரிசுகளுக்கும் மற்றும் அவர்களிடம் இருந்து கிரையம் பெற்ற மற்ற வாரிசுதாரர்களுக்கும் 2ஆம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவிக்கும் மற்றும் எனக்கும் கேள்வி எழுப்ப சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.3/4பி மற்றும் 4/2–க்கு செல்ல 4/1–ல் உள்ள வழி பாத்தியம் அவசியமானது என்றால் சரியல்ல, வழி பாத்தியம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது நானும் எனது மனைவியும் மற்றும் எனது தம்பியும் அவரது மனைவியும் சொத்தை எங்கள் வாரிசுகளுக்கு எழுதி வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கின் தீர்ப்பு அவர்களையும் கட்டுபடுத்தும் என்றால் சரிதான்.

19. நாங்கள் வண்டி வழி பாத்தியத்தை தடை செய்ததால் வாதிகள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் உண்மைக்கு மாறானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.